முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 231/2018

தேதி : 04–08–2023

(வா.சா.1) – பிரசாத்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நான் திருச்சியில் வசிக்கிறேன். பிரதிவாதி மதுரையில் வசிக்கிறார். என்னுடைய Contractor வசந்த் என்பவர் மூலமாக பிரதிவாதி எனக்கு பழக்கம். பிரதிவாதி மின்சார வாரியத்தில் வேலை செய்கிறார். தாவா ஈடுகடன் பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்பு எவ்வளவு நாளாக பிரதிவாதியை தெரியும் என்றால் சுமார் 6 மாதங்களாக தெரியும். பிரதிவாதி எனக்கு ஏற்கனவே 8–1/2 செண்ட் சொத்து கிரையம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார், அந்த வகையில்தான் பிரதிவாதி எனக்கு பழக்கம், வேறு வகையில் கிடையாது. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு அவ்வாறு பிரதிவாதி எனக்கு 8–1/2 செண்ட் சொத்து கிரையம் கொடுத்தார். இதற்கு முன்பு தாவா புல எண்ணில் உள்ள சொத்தைப் பொறுத்து 12.11.2016 தேதி ஒரு கிரைய ஒப்பந்தம் நானும், பிரதிவாதியும் செய்து கொண்டோம். அந்த கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் சம்பந்தமாக பிரதிவாதி மீது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 26/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கை நான் நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டேன் என்றால் அந்த வழக்கு தற்போது எந்த நிலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கை 2019–ம் ஆண்டிலேயே தள்ளுபடிக்கு விட்டுவிட்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த

வழக்கின் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் என்பதால் தான் இந்த வழக்கின் அடமானக் கடன் பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல, அந்த வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை. அந்த கிரைய உடன்படிக்கை எழுதிக்கொண்ட பிறகு 3 நாட்கள் கழித்து தாவா அடமானக் கடன் பத்திரம் பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரைய உடன்படிக்கை பத்திரத்தை ஜார்ஜ் மற்றும் பிரதிவாதியின் மனைவி கலா ஆகியோர் முன்பாக எழுதப்பட்டது. அந்த ஆவணம் திருச்சியில் வைத்து எழுதப்பட்டது. அந்த ஆவணத்தை தயார் செய்த ஆவண எழுத்தர் பெயர் நடேசன் ஆகும். அவர் உசிலம்பட்டியை சேர்ந்தவர். அந்த கிரைய உடன்படிக்கை சொத்திற்கு வடக்கிலும், மேற்கிலும் எனக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்து உள்ளது. அந்த கிரைய உடன்படிக்கை படி சொத்தை கிரையம் பெற நான் முன்வரவில்லை என்றால் சரியல்ல. அந்த கிரைய உடன்படிக்கை படி பிரதிவாதி சொத்தை கிரையம் எழுதி பதிவு செய்து கொடுக்க தயாராக இருந்தார் என்றும் நான் தான் முன்வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் சதுரடி கணக்கில் உள்ள நிலத்தை அரசு Approval இல்லாமல் பதிவு செய்ய முடியாது என்று அரசு உத்தரவு இருந்ததால் அந்த சொத்தை கிரையம் எழுதி பதிவு செய்யவில்லை என்றும், அதனால் தாவா ஈடு கடன் பத்திரம் எழுதப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு பிரச்சனை இருந்ததால் எனக்கு சொத்து வேண்டாம் என்றும், பணத்தை திருப்பி தந்தால் போதும் என்றும் சொன்னேன் என்றால் சரிதான். அவர் கிரையம் செய்து தராததால் அவ்வாறு பணத்தை திருப்பி கொடுக்கும்படி சொன்னேன். அதன் அடிப்படையில் 13.02.2017 தேதி பிரதிவாதி எனக்கு ரூபாய் இரண்டு லட்சம் திருப்பி கொடுத்தார் என்றால் சரியல்ல. தனுஷ்கோடி மற்றும் சுபாஷ்சந்திரபோஸ் ஆகியோர் முன்னிலையில் அந்த பணத்தை பிரதிவாதி எனக்கு கொடுத்தார் என்றால்

சரியல்ல. நான் வட்டி தொழில் செய்யவில்லை. தாவா ஈடுகடன் பத்திரத்திற்கான தொகையை எந்தெந்த தேதியில் எங்கு வைத்து பிரதிவாதியிடம் கேட்டேன் என்று பிராதில் சொல்லவில்லை. போனில் பிரதிவாதியிடம் கேட்டேன். ஜார்ஜ் என்பவர் மூலமாகவும் அவர் நேரில் சென்று பிரதிவாதியிடம் கேட்டு வந்தார். அவர் எந்த தேதியில் அவ்வாறு நேரில் கேட்டார் என்று என்னால் சொல்ல முடியாது. ஈடுகடன் பத்திரத்திற்கு 3 மாத தவணை போட்டு பத்திரம் பதியப்பட்டது. அந்த ஈடுகடன் பத்திரம் பதிந்த தேதியிலிருந்து இரண்டு வருடம் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுவரை பணத்தை செலுத்துமாறு வாய்மொழியாக கேட்டுக்கொண்டே இருந்தோம். மேற்படி கிரைய ஒப்பந்தம் சம்பந்தமாக நானும், பிரதிவாதியும் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததால் தான் தாவா ஈடுகடனை நான் வலியுறுத்தவில்லை என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதியிடமிருந்து அதிகமான பணம் பெற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய உடன்படிக்கை பொறுப்பிற்காக தாவா ஈடுகடன் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2023.08.05 14:40:05 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.